செய்தி வெளியீடு எண் :065 நாள் : 10.01.2023

செய்தி வெளியீடு

**மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் கட்டப்பட்ட உடற்பயிற்சிக் கூடத்தினை மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.**

பெருநகர சென்னை மாநகராட்சி, தேனாம்பேட்டை மண்டலம், வார்டு-123க்குட்பட்ட ஆழ்வார்பேட்டை, புனித மேரி சாலையில் மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் 2021-22ஆம் ஆண்டிற்கான தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.36 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்ட உடற்பயிற்சிக் கூடத்தினை மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இன்று (10.01.2023) திறந்து வைத்தார்.

இக்கட்டடம் 94.2 ச.மீ. பரப்பளவில் கட்டப்பட்டுள்ளது. இதில் உடற்பயிற்சி சாதனங்கள், உடற்பயிற்சிக் கூடம், கழிப்பிட வசதி போன்ற வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இந்நிகழ்ச்சியில், தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன் அவர்கள், மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.த.வேலு அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் திரு.மு.மகேஷ்குமார் அவர்கள், மத்திய வட்டார துணை ஆணையாளர் (பொ) திரு.எம்.சிவகுரு பிரபாகரன், இ.ஆ.ப., அவர்கள், மண்டலக்குழுத் தலைவர் திரு.எஸ்.மதன்மோகன் அவர்கள், மாமன்ற உறுப்பினர் திருமதி மோ.சரஸ்வதி அவர்கள் மற்றும் மண்டல அலுவலர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in